பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
20 07 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u> –

1. இந்தியா – நியுசிலாந்து இடையே இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ் ஏழை எளிய சாலையோர வியாபாரிகளுக்கு கடந்த பத்து ஆண்டுகளில் எட்டாயித்து 600 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.
3. பங்ளாதேஷில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தங்கியுள்ள நாலாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய மாணவர்களை பத்திரமாக அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை வெளியுறவுத்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.
4. இந்திய உதவியுடன் பூட்டானில் ஐயாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 61 திட்டங்களை மேற்கொள்வதற்கு இருதரப்பிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தப் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

இந்தியாவுக்கும் – நியுசிலாந்துக்கும் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நியுசிலாந்து பிரதமர் திரு **Christopher Luxon**-னுடன் தொலைபேசியில் உரையாடியபோது இதைத் தெரிவித்த பிரதமர், நியுசிலாந்தும் இதற்கு முழு ஒத்துழைப்பை வரும் ஆண்டுகளில் அளிக்கும் என்று அந்நாட்டு பிரதமர் தெரிவித்தார்.

இருதரப்புக்கும் பயனளிக்கும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு விரிவுபடுத்தப்படும் என்றும் இந்த பேச்சுக்களின்போது தெரிவிக்கப்பட்டது..

இருதரப்பு வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு, கால்நடை பராமரிப்பு, மருந்து பொருட்கள் உற்பத்தி, கல்வி, விண்வெளித்துறை உள்ளிட்ட முக்கியமான துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படும் என்றும் இந்த உரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

நியூசிலாந்தில் வசிக்கும் இந்தியர்களின் நலனுக்காக எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி, திரு **Christopher Luxon** –யிடம் தெரிவித்தார்.

இந்தியர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனுக்கான திட்டங்களை நியூசிலாந்து தொடர்ந்து செயல்படுத்தும் என்று அந்நாட்டு பிரதமர் இந்த உரையாடலின்போது திரு நரேந்திரமோடியிடம் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பத்மஸ்ரீ விருதுபெற்ற இயற்கை விவசாயி திருமதி கமலா பூஜாரியின் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

ஒடிஸா மாநிலம் கோராபட் பகுதியைச் சேர்ந்த பழங்குடியின பெண்ணான திருமதி கமலா பூஜாரி ஜெய்ப்பூரில் உள்ள எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையில் இயற்கை விவசாய தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றியுள்ளார்.

கமலா பூஜாரியின் இயற்கை விவசாயப் பணிகளும், பல்லுயிர் பெருக்கத்துக்கான ஆய்வுப் பணிகளும் என்றென்றும் நினைவுக் கூறத்தக்கவை என்று பிரதமர் கூறியுள்ளார்.,

பழங்குடியின மக்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் பெண்மணியாக அவர் திகழ்ந்துள்ளார் என்றும் திரு நரேந்திரமோடி தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆளும் திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு நாட்டிலேயே ஊழல் மிகுந்ததாக காணப்படுகிறது என்று பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித்ஷா குற்றம்சாட்டியுள்ளார்.,

ராஞ்சியில் ஜார்க்கண்ட் மாநில பிஜேபி தொண்டர்களிடையே உரையாற்றிய அவர், ஜார்க்கண்ட் மாநில அமைச்சரின் தனி உதவியாளரிடமிருந்து 30 கோடி ரூபாயும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து 300 கோடி ரூபாயும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

பங்ளாதேஷிலிருந்து அதிக அளவு ஊடுறுவல்கள் ஜார்க்கண்டில் நிகழ்ந்து வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இதனை தடுக்க திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை என்றும், வாக்கு வங்கியை மட்டுமே கருத்தில் கொண்டு ஊடுறுவல்களைத் தடுப்பதில் சுணக்கம் காட்டுவதாகவும் திரு அமித்ஷா கூறினார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ் ஏழை எளிய சாலையோர வியாபாரிகளுக்கு கடந்த பத்து ஆண்டுகளில் எட்டாயித்து 600 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று சாலையோர உணவகங்களில் உணவு பாதுகாப்பு குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை விளக்கும் சேவை இணையதளத்தை தொடங்கி வைத்து பேசிய அவர், சுகாதாரமான முறையிலும் தூய்மையாக சமைத்து கொடுப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் பயிற்சி பெற்று திறன்மிக்க செயல்பாடுகளை வெளிப்படுத்த வேண்டுமென்ற தொலைநோக்கு பார்வையை கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சுகாதாரமான முறையில் சமைத்து தரமான உணவுப் பொருட்களை மக்களுக்கு சாலையோர உணவகங்கள் அளிக்க வேண்டுமென்றும், கழிவுகளை முறையாக பராமரிப்பது குறித்த விழிப்புணர்வு பெற வேண்டுமென்றும் திரு ஜெ பி நட்டா கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

இந்தியா – பூட்டான் வளர்ச்சிக்கான மூன்றாவது ஒத்துழைப்பு கூட்டத்தில் இந்திய வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிசிறி-யும், பூட்டான் நாட்டின் செயலர் திரு **Aum pema choden** -னும் கலந்து கொண்டனர்.

திம்புவில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் பூட்டான் தரப்பில் 13-வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்திய உதவியுடன்கூடிய வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், இரு நாடுகளும் இணைந்து நாலாயிரத்து தொள்ளாயிரத்து 58 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு துறைகளில் 61 திட்டங்களை மேற்கொள்வதற்கு இருதரப்பிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்கட்டமைப்பு, எரிசக்தி .திறன்மேம்பாடு, கல்வி, விளையாட்டு, மின்னணு பொருளாதாரம், விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் பிரதமர் திரு நரேந்திரமோடி மேற்கொண்ட பூட்டான் பயணத்தின்போது பூட்டானின் 13-வது திட்டக்காலத்தில் பத்தாயிரம் கோடி ரூபாய் இந்தியா சார்பில் நிதி உதவி அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

**[]<<<>>>[]**

பங்ளாதேஷில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தங்கியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய மாணவர்களை பத்திரமாக இந்தியா அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை வெளியுறவுத்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் 778 இந்திய மாணவர்கள் பங்ளாதேஷில் உள்ள துறைமுகங்களிலிருந்து இந்தியா திரும்பியுள்ளதாகவும், 200 மாணவர்கள் டாக்கா மற்றும் சிட்டஹாங் விமான நிலையங்களிலிருந்து விமானம் மூலம் இந்தியா திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உதவிகளை டாக்காவில் உள்ள இந்திய துணை தூதரகம் செய்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தூதரக ரீதியாக உள்ளூர் அரசு அதிகாரிகளிடம் தகவல்கள் பெறப்பட்டு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்ளாதேஷை சுற்றியுள்ள இந்தியர்கள் இந்திய சர்வதேச எல்லைப்பகுதியை சிரமமின்றி கடப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பங்ளாதேஷின் விமான போக்குவரத்து குடியேற்றத்துறை அதிகாரிகள், துறைமுகங்கள் மற்றும் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் தூதரகம் மூலமாக பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்காவில் உள்ள துணை தூதர் மற்றும் அந்நாட்டில் உள்ள பல்வேறு உதவி தூதர் அலுவலர்களிடம் பேசிய அந்நாட்டில் சிக்கியுள்ள நாலாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய மாணவர்களை பத்திரமாக கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேபாளம் மற்றும் பூட்டான் மாணவர்களை பத்திரமாக பங்ளாதேஷிலிருந்து அழைத்து வருவதற்கும் இந்தியா உதவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய துணை தூதரக அதிகாரிகள், பங்ளாதேஷ் அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்து வருவதாகவும், மாணவர்களை பாதுகாப்பாக தாயகம் கொண்டு வருவது குறித்து தொடர் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே பங்களாதேஷில் வசிக்கும் தமிழர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குமாறு, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பங்களாதேஷில் மாணவர்கள் போராட்டம் காரணமாக, வன்முறை ஏற்பட்டுள்ளதை அடுத்து, முதலமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழக அரசின் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறையின் சார்பில் தொலைபேசி உதவி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

உதவி தேவைப்படுவோர் 1 8 0 0 – 3 0 9 3 7 9 3 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

தமிழக அரசின் வருமுன் காப்போம் திட்டத்தை மக்கள் பயன்படுத்தி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டுமென மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே வருமுன் காப்போம் திட்ட முகாமை அவர் இன்று தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் மூலம் மக்களின் ஆரோக்கியம் கண்காணிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்,

இந்த திட்டத்தை மக்கள் முழுமையாக பயன்படுத்தி தங்கள் உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று திரு ராமச்சந்திரன் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும் அமைச்சர் வழங்கினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே பழமையான வட்டெழுத்து கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

950 ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்வெட்டு இது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் – லெட்சுமணன் ) 47 செகண்ட்ஸ்*

**[]<<<>>>[]**

தாய்லாந்தின் **Sriracha**-வில் நடைபெற்று வரும் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.
87 கிலோ எடைப்பிரிவில் ரோஹித்தும், 130 கிலோ எடைபபிரிவில் உத்தம் ராணாவும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**End of News**